DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No. 105/2019 |
| Police Station | Thiruppuvanam P.S |
| Deposition of Witness for | LW. 3/PW.2 |
| Name | பிரபு |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1 absent . Petition filed and allowed. A4, A5 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 18.12.2023 at 11.50a.m

**முதல் விசாரணை:**

நான் திருப்புவனம் வைகை வடகரையில் குடியிருந்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. கடந்த 14.05.2019ந் தேதி மாலை 5.30 மணியளவில் வடகரை விளையாட்டு மைதானத்தில் உள்ள புளியமரத்தடியில் நானும் விக்னேஸ்வரன், போதுராஜா, முத்துபாண்டி, அருண்குமார் ஆகியோர் உட்காந்து பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது எதிரி மச்சக்காளை மது அருந்திவிட்டு எங்களை அசிங்கமாக பேசினார். நாங்கள் அவரை சத்தம் போட்டு அனுப்பிவைத்தோம். பின்னர் ஜான்ரோஸ். ஜான்ராஜ் இருவரும் மாலை 6.00 மணிக்கு வந்து எங்க அப்பாவை ஏன் சத்தம் போட்டீர்கள் என்று சொல்லி கத்தியை வைத்து அய்யம்போஸின் தலையில் ஜான்ராஜ் வெட்டினார். பின்னர் விக்கி என்ற விக்னேஸ்வரனை ஜான்ராஜ் வலது கை மணிக்கட்டில் வெட்டினார். பின்னர் ஜான்ராஜ் வலது கைமணிக்கட்டில் வெட்டினார். காயம் பட்ட நாங்கள் வழிப்போக்கு ஆட்டோவில் சிகிச்சைக்காக திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலீசார் விசாரணைக்காக திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தனர். விக்னேஸ்வரன் புகார்மனு கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

**கு.வி (எதிரிகள் தரப்பில்)**

சாட்சி பட்டியலில் கண்ட விக்னேஸ்வரன், அய்யம்போஸ், கணபதி, முத்துப்பாண்டி, பிரபாகரன், போதுராஜா ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் சரிதான், மற்றும் நண்பர்கள். இநத வழக்கில் எனது உறவினர்கள் மற்றும் நண்பர்களை தவிர்த்து வேறு தனிப்பட்ட சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல, தனிப்பட்ட நபர்கள் சாட்சியாக இருக்கிறார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் திருப்புவனம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னீடு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல, எனக்கு முதல்உதவி சிகிச்சை கொடுத்து அனுப்பிவிட்டார்கள். சம்பவத்தன்று வடகரையில் தொட்டிச்சி அம்மன் திருவிழா நடந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த தேதியில் திருப்புவனம் மைதானத்தில் மேளம் அடிப்பவர்கள் மற்றும் மச்சக்காளை இருந்தார்கள் என்றால் மச்சக்காளை இல்லை, மேளம் அடிப்பவர்கள் இருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. அப்பொழுது நான்,அய்யம்போஸ், விக்னேஸ்வரன் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்தோமா என்றறல் இருச்ககர வாகனத்தில் வரவில்லை, அங்கு உட்கார்ந்திருந்தோம். சம்பவம் நடந்த நேரத்தில் இருசக்கர வாகனத்தில் வந்து 3 நபர்கள் விழுந்தார்களா என்றால் அப்படி எதுவும் ஞாபகம் இல்லை. நான் அய்யம்போஸ், விக்னேஸ்வரன் ஆகியோர் கீழே விழுந்தோம் என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் மாலை 6 லிருந்து 6 1/4 மணிக்கு நடந்தது. சம்பவம் முடிந்து எவ்வளவு நேரத்தில் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 7 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன். போலீசார் விசாரணையில் சாட்சி 2 அய்யம்போசுக்கு எந்த இடத்தில் காயம் என்று சொல்லியுள்ளேனா என்றால் தலையில் காயம் என்று சொல்லியுள்ளேன். எனக்கு வலது கை விரலில் காயம் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் சேர்ந்தபொழுது என்னை எத்தனை நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் வாள் வைத்து தாக்கியதாக சொல்லியுள்ளேன். அது எத்தனை அடி என்றால் 1 1/2 அடி இருக்கும். அ.சா.1க்கு என்ன காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஏற்பட்ட காயத்தை மட்:டும் சொன்னேன். வழக்கு சம்மந்தமாக விக்னேஸ்வரன் என்ன விபரம் கூறி புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் என்னை ராஜாராம்,

ரகுவேல் பிடித்துக்கொண்டு 1ம் எதிரி வெட்டியதாக சொல்லியுள்ளேன் என்றறல் சரிதான். வழக்கு சம்பவத்தில் 3ம் எதிரி ரகுவேலுக்கு கையில் வெட்டுக்காயம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த வெட்டுக்காயத்திற்கு 3ம் எதிரி மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் எனக்கு காயம் எதுவும் இல்லை என்றும் நான் மருத்துவமனைக்கே செல்லவில்லை என்றும் இந்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி 2க்கு காயம் ஏற்பட்ட உடன் சம்பவ இடததில் இரத்தம் கீழே பட்டு இரத்தக்கரையானது என்றால் சரிதான். நான் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு சம்பவத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, சிறிய காயம் ஏற்பட்டது. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அ.சா1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், அய்யம்போஸ், விக்னேஸ்வரன் மூவரும் 3ம் எதிரி ரகுவேலை வெட்டி காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. அந்த காயத்திற்கு 3ம் எதிரி எங்கள் மீது புகார் கொடுத்துவிடுவார் என்ற பயத்தில் அவருக்கு முன்னால், பைக்கிலிருந்து விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி அ.சா.1 போலீசாரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இலலை என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**